


'நான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன்' என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளத் தயங்க வைக்கிற விஷயங்கள் ஒரு பக்கம் இருந்தாலும், சில விஷயங்களை நினைக்கும்போது தமிழர்கள் நிச்சயம் பெருமைப்படலாம்!

அப்படிப்பட்ட அபூர்வமான விஷயங்களில் ஒன்று தெருக்கூத்து.

'தெருக்கூத்தா?' என்று முகத்தைச் சுளிக்கிறவர்களும் தமிழ்நாட்டில் உண்டு. ஆனால், தெருக்கூத்தைப் பற்றி நேரடியாகத் தெரியாமலும், தாங்கள் பார்த்த சில கூத்துக்கள் சீர்கெட்ட நிலையில் இருப்பதாலும் இப்படிப்பட்ட முகச்சுளிப்புகள் வருகின்றன.

''இன்னிக்கு ஏது சார் தெருக்கூத்து? குக்கிராமத்துலகூட டெண்ட் கொட்டகை வந்தாச்சு. சினிமா வந்து தெருக்கூத்தெல்லாம் தூக்கியடிச்சுருச்சு'' என்று சொல்பவர்களுக்கு ஓர் ஆச்சரியமான தகவலைத் தெரிவிக்கிறார் அமெரிக்க ஆராய்ச்சியாளர் ரிச்சர்ட் ஃப்ராஸ்கா. தமிழ்நாட்டின் தெருக்கூத்தைப் பற்றிய நுணுக்கங்களை ஆராய்ந்தவர். இவர், ''சென்னை நகரில் கூடப் பல தெருக்கூத்துக் குழுக்கள் இருக்கின்றன. சாதாரண மக்கள் வசிக்கும் பகுதிகளில் கூத்துக் குழு வைத்திருப்பது ஒரு கௌரவமாகவே கருதப்படுகிறது. தமிழகம்

முழுவதும் பல கிராமங்களில் கூத்து பாப்புலராகவே இருக்கிறது. தெருக்கூத்தை சினிமாக அழித்து விட்டது என்று சொல்வது எனக்கு ஆச்சரியம் தருகிறது!'' என்கிறார் ஃப்ராஸ்கா..

சினிமா தெருக்கூத்தை அழிக்கவில்லை; ஆனால் மாற்றிவிட்டது. பெரும்பாலான குழுக்கள் (தமிழ்நாடு இயலிசை நாடக மன்றத்தால் 'கௌரவிக்கப்பட்ட ஒரு குழு உட்பட!) தெருக்கூத்து என்ற பெயரில் அதற்குச் சம்பந்தமில்லாத வடிவத்தில் எதையோ நடத்துகிறார்கள், சினிமாவின் பாதிப்பால் கொச்சையான ஆபாச வசனங்கள் நுழைந்து விட்டன, இவற்றைப் பார்க்க நேருகிறவர்களுக்குத் தெருக்கூத்தைப் பற்றியே தவறான கருத்துகள் ஏற்படத்தான் செய்யும்.

ஆனால், உண்மையில் தெருக்கூத்து தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்க்கிற விஷயம். தமிழ்ப் புலவர்களிலிருந்து தமிழ் அரசியல்வாதிகள்வரை ஓயாமல் முழங்குகிற முத்தமிழும் (இயல், இசை, நாடகம்) ஒன்றாகக் கலந்திருக்கிற நிறைவான கலை வடிவம் தெருக்கூத்து.

பாட்டு, நடனம், வசனம் மூன்றும் சேர்ந்த ஒரு முழுமையான தியேட்டராக இருந்த தெருக்கூத்து உருமாற ஆரம்பித்தது சினிமாவால் மட்டுமல்ல; முன்பே, தமிழ் நாடகத் தந்தை என்று இப்போது போற்றப்படுகிற தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், மேற்கத்திய நாடக வடிவத்தையும் தெருக்கூத்தையும் கலந்து ஒரு புதிய நாடக மரபை ஏற்படுத்தினார். இன்றைக்கு நாடக அரங்குகள் எல்லாம் சினிமா கொட்டகை போன்ற அமைப்பிலேயே இருப்பது இதையொட்டித்தான். மூன்று பக்கமும் ஆடியன்ஸ் உட்கார்ந்து பார்க்கக்கூடிய வடிவத்தில் இருந்த கூத்தை மேற்கத்திய பாணியில் 'ப்ரொசீனியம்' மேடைக்குக் கொண்டு வந்தார் சங்கரதாஸ். கூத்தின் இசையை மட்டும் எடுத்துக் கொண்டு அதை வளப்படுத்திய சுவாமிகள், கூத்தை மேடைக்குக் கொண்டுவந்த போது அதிலிருந்த நாட்டியத்தைச் சுத்தமாக நீக்கிவிட்டார். இன்றும்கூட கிராமத்து மக்கள் இந்த அடிப்படையில் கூத்து, நாடகம் என்று தனித் தனியாகவே சொல்லுகிறார்கள்.

சங்கரதாஸ் காலத்தில் நாட்டியம் நீக்கப்பட்டது. அவருடைய நாடக மரபில் பிறகு வந்தவர்கள் பாட்டையும் விட்டு விட்டார்கள். அதிலிருந்து பிறகு வந்த நாடக வடிவம்தான் இன்றைய சபா நாடகங்களுடைய வடிவம்! - ஆனால், மேலை நாடுகளில் உள்ள டிராமா, மியூசிகல் ஆபேரா, போல போன்ற பல்வேறு நடன, நாடக வடிவங்களுக்கெல்லாம் நிகரான முழுமையான வடிவத்தில் இருந்த தெருக்கூத்தை 1984-லும் முறைப்படி நடத்துகிற குழுக்களைத் தேட வேண்டியிருக்கிறது.

அப்படிப்பட்ட அபூர்வமான ஒரு கூத்துக் கலைஞர் என்று புரிசை கண்ணப்பத் தம்பிரானைச் சந்தேகமில்லாமல் சொல்லலாம். கண்ணப்பத் தம்பிரானுக்கு இது பொன் விழா ஆண்டு. 17 வயதில் கட்டியக்காரனாகக் கூத்தாட ஆரம்பித் தவர் ,50 வருடங்களாக முழு நேர கலைஞராக இருந்து வந்திருக்கிறார், அவருடைய குடும்பத்தினர் குறைந்தது 150 வருடங்களாகக் கூத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தோல் பொம்மலாட்டக் கலைஞராகவும், கோயில் தேவதாசிகளுக்கு நட்டுவாங்கம் செய்த பரத நாட்டியக் கலைஞராகவும் இருந்த புரிசை வீராசாமி தம்பிரான்தான் முதலில் புரிசையில் தெருக்கூத்தை ஆரம்பித்தார் .1892-ல் அவருடைய மறைவுக்குப் பிறகு அவர் மகன் ராகவத்தம்பிரான் 1934 வரை கூத்தில் ஈடுபட்டிருந்தார் ராகவத் .ராகவத்தம்பிரான் இரண்டு

மகன்களான நடேசத் தம்பிரானும், கண்ணப்பத் தம்பிரானும் பிறகு பரம்பரைக் கலையைத் தொடர்ந்தார்கள்.

தமிழ்நாட்டில் தேவதாசிகள் நடனமாகக் கருதப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்த 'சதிரு' க்கு 'பரத நாட்டியம்' என்று புதுப் பெயர் சூட்டிக் கௌரவம் ஏற்படுத்தியவர்கள் ருக்மணி தேவியும், ஈ. கிருஷ்ணய்யருமாவர். இவர்களில் கிருஷ்ணய்யர் நடேசத் தம்பிரானின் கூத்தைப் பற்றி அன்றே சிறப்பாக எழுதியிருக்கிறார். சில வருடங்களுக்கு முன்பு நடேசத் தம்பிரான் இறந்தார். இப்போது கண்ணப்பத் தம்பிரான்தான் இந்தக் கலை வடிவத்தைச் சீர்கெடவிடாமல் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்.

தன்னுடைய 67-வது வயதிலும், 20 வயது இளைஞனைப் போல உற்சாகத்துடன் கூத்தாடிக் கொண்டிருக்கிறார் கண்ணப்பத் தம்பிரான். தவறான ஆபரேஷனால் ஒரு கண் பார்வையைச் சில வருடங்களுக்கு முன்னால் இழந்து விட்டது அவரைப் பாதிக்கவே இல்லை. கூத்தாடுவது சுலபமல்ல. 32 வகை கட்டுக்களை உடம்பில் சுற்றிக் கொண்டு ஆட வேண்டும். கல்யாண முருங்கை மரத்தில் செய்யப்பட்ட புஜக்கிருதிகளையும், கிரீடங்களையும், இடுப்பை இறுக்கிக் கட்டிய கட்டையும் தாங்கிக் கொண்டு தொடர்ந்து ஆறு மணி நேரம் பல்வேறு பாவங்களோடு, நாலரை கட்டை சுருதியில் பாடியபடி நடனமும் ஆடுவது விளையாட்டான விஷயமில்லை.

முதிர்ந்த பிராயத்திலும் இதை அநாயாசமாகச் செய்து கொண்டிருக்கிற கண்ணப்பத் தம்பிரான், கூத்துக்கு வேண்டிய ஆடை, அணிகளைத் தயாரிப்பதிலும் வல்லவர். புஜ கிருதிகளையும் கிரீடங்களையும் இடுப்புப் பாவாடைகளையும் அவரே டிஸைன் செய்து தயாரிக்கிறார்.

''நான் ஆட ஆரம்பிச்ச காலத்துல ஆட்டு வால் ரோமத்திலதான் மீசை வெக்கற வழக்கம். ஆனா கம்பீரமான பாத்திரங்களுக்கு அது பொருந்தி வரலே. அதனால நானே கறுப்பு நூலையும் துணியையும் வெச்சு மீசை தயாரிக்க ஆரம்பிச்சேன்'' என்றார் தம்பிரான். (இந்த மீசைகள் கம்பீரமாகக் காட்சி தருவதைப் படத்தில் பார்க்கலாம்.)

அதே போல, கூத்தில் இடுப்புப் பாவாடைகளையும், தான் கொஞ்சம் மாற்றியமைத்ததாகத் தெரிவித்தார் கண்ணப்பத் தம்பிரான், கூத்துப் பாத்திரங்கள் அணிந்து வந்த பாவாடை குடை போல விரிந்ததாகக் காட்சியளிக்க என்ன செய்வது? முதலில் ஏராளமான துணிகளை இடுப்பில் கட்டிக் கட்டி அகலப்படுத்திக் கொண்டிருந்தார்களாம். கண்ணப்பத் தம்பிரான் உள்ளூரில் எப்போதும் கிடைக்கிற வைக்கோலைக் கொண்டு குடை போன்ற அமைப்பை உருவாக்கி விட்டார்!

கர்நாடக இசை ராகங்கள்தான் கூத்துப் பாடல்களிலும் பயன்படுத்தப் படுகின்றன. என்னென்ன ராகங்கள் என்று கண்ணப்பத் தம்பிரானிடம் கேட்டபோது அவர், ''நாட்டை, கல்யாணி, பூபாளம், மத்யமாவதி, மோகனம், முகாரி, பைரவி, காம்போதி, யதுகுல காம்போதி, ஆனந்தபைரவி, கேதாரகௌளம், நாதநாமக்கிரியை, அடாணா, சாவேரி'' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

கண்ணப்பத் தம்பிரானுக்குப் பிறகு இந்தக் கலையை முறை தவறாமல் நடத்த வழியிருக்கிறதா?

தொல்பொருள் ஆராய்ச்சியாளரான டாக்டர் இரா. நாகசாமியின் முயற்சியால் டெல்லி சங்கீத நாடக அகாடமி கண்ணப்பத் தம்பிரானுக்குப் புரிசை கிராமத்தில் தெருக்கூத்துப் பயிற்சிப் பள்ளி நடத்த மான்யம் கொடுத்திருக்கிறது. இங்கே பயிற்சி பெற்ற மாணவர்களைக் கொண்டு 'சைந்தவ பங்கம்' என்ற ஒரு புதிய தெருக்கூத்தைக் கண்ணப்பத் தம்பிரான் அண்மையில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றினார். மதுரையில் நிஜ நாடக இயக்கத்தை நடத்திவரும் தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர் டாக்டர் மு. ராமசாமி, சென்ற ஆண்டு இந்தப் பள்ளியில் பயிற்சி பெற்றார்.

கண்ணப்பத் தம்பிரான் தன் வாழ்க்கையையே கூத்துக்கு அர்ப்பணித்து விட்டார். விவசாயத்தில்கூட ஈடுபடாமல் கூத்தை நம்பியே வாழ்ந்தார். அவருடைய மூத்த மகன் காசி என்பவர், தபால் இலாகாவில் வேலை செய்யப்போன பிறகும் கூத்தை விடவில்லை. இரண்டாவது மகன் சம்பந்தன், தந்தையைப் போல தன்னை முழு நேரமும் கூத்துக்குக் கொடுத்து விட்டார்.

32 வயதாகும் சம்பந்தனின் காலத்தில் தெருக்கூத்து அடுத்த கட்டத்துக்குப் போய் விடுகிறது. சம்பந்தன் நவீன நாடகமும் படித்தவர். வங்க நாடகாசிரியர் பாதல்சர்க்காரிடம் பயிற்சி பெற்றார். டெல்லி நேஷனல் ஸ்கூல் ஆஃப் டிராமா நடத்திய நாடகப் பயிற்சி முகாமில் பங்கேற்றார். தனஞ்ஜெயனிடம் நடனப்பயிற்சியும் எடுத்துக் கொண்டிருக்கிறார். கண்ணப்பத் தம்பிரானின் உறவினரான இளைஞர் ஆறுமுகம், திருச்சூர் நாடகப் பள்ளியில் நாடக டிப்ளமா படித்து முடித்திருக்கிறார்.

தெருக்கூத்தின் பக்கம் படித்த நடுத்தர வகுப்பினரின் கவனத்தை ஈர்ப்பதில் சென்னையில் 'கூத்துப்பட்டறை' - என்ற அமைப்பு பெரிய பங்காற்றியிருக்கிறது. எழுத்தாளர் ந. முத்துசாமி 1977-ல் ஆரம்பித்த இந்த அமைப்பு தொடர்ந்து தம்பிரான் குழுவினருக்கு உதவி வருகிறது. பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தது. தமிழில் கூத்தை அடிப்படையாகக் கொண்ட நவீன நாடகம் உருவாக வேண்டும் என்ற லட்சியத்தோடு இயங்கிவரும் முத்துசாமி, பலவிதங்களில் கண்ணப்பத் தம்பிரானையும் சம்பந்தனையும் இதற்கு உதவ வைத்திருக்கிறார். தெருக்கூத்தில் எவ்வளவு காலத்துக்கு மகாபாரதக் கதையையே நடத்துவது? புதிய சிந்தனைகள் அதில் வர முடியுமா? அப்படி வராவிட்டால் கூத்து தொடர்ந்து நீடிக்க முடியுமா என்ற கேள்விகளும் எழுகின்றன.

தெருக்கூத்தின் சில அம்சங்களை எடுத்துக் கொண்டு கூத்துப்பட்டறை பல நாடகங்களை நடத்தியிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிய என் நாடகமான 'நவீன குசேலன் கதை'யை சம்பந்தன் தன் கிராமத்தில் பள்ளிக்கூடச் சிறுவர்களைக் கொண்டு கூத்து பாணியில் நடத்திப் பார்த்திருக்கிறார்.

மகாபாரதம் பழையதானாலும் அதிலும் நவீன பிரச்னைகளைத் தொட முடியும் என்பதற்கு பாரதியின் பாஞ்சாலி சபதமே ஓர் உதாரணம். பொதுவாக,

வில்லிபுத்தூரார் பாரதத்தையே பின்பற்றும் தம்பிரான் குழுவினர், அண்மையில் பாரதியின் பாஞ்சாலி சபதத்தைத் தெருக்கூத்துக்கு எடுத்துக் கொண்டார்கள்.

இன்றைய பிரச்னைகளையும் தெருக் கூத்தால் தீவிரமாக எடுத்துக்காட்ட முடியும் என்பதற்கு அதிலுள்ள கட்டிய காரன் பாத்திரமே சாட்சி. தெருக்கூத்துக் கட்டியக்காரனைப் போல வேறு எந்த இந்திய மொழியிலும் இல்லை. இவன் காமெடியனாகவும் (விதூஷகனாகவும்) இருக்கிறான். கதை சொல்பவனாகவும் இருக்கிறான். விமரிசகனாகவும் இருக்கிறான். புராண பாத்திரங்களையும், எதிரிலிருக்கிற ஆடியன்ஸையும் இணைத்துக் கதை சொல்கிற கட்டியக்காரனால் எந்தப் பிரச்னையையும் தொட முடியும் என்பது தான் அவனுடைய சிறப்பு.

இதற்கு ஒரு சின்ன உதாரணத்தை தஞ்சாவூரில் நடந்த கூத்தில் காண முடிந்தது. கூத்து ஆரம்பத்தில் விநாயகர் வருவதாகவும் அவரைக் கட்டியக்காரன் கிண்டல் செய்ததும் அவர் அவனை காமெடியனாகப் போகக் கடவது' என்று சபித்து விட்டுச் செல்வதாகவும் அமைப்பது மரபு. அன்றைக்குக் கிண்டல் என்ன தெரியுமா?

**கட்டியக்காரன்:** விநாயகரே. உங்க தும்பிக்கையைக் கொஞ்சம் கொடுங்க.

**விநாயகர் :** எதற்கு?

**க:** தண்ணிப் பஞ்சமா இருக்கு. கொடுத்தீங்கன்னா தண்ணி பிடிக்க பைப்பா உபயோகிச்சுக்குவேன்!

**வி:** (சாமர்த்தியமாக) எனக்கு ஒரே ஜலதோஷம். இது எச்சில் தும்பிக்கை.

**க:** (விடாமல்) பரவாயில்லை.. குடுங்க. (தும்பிக்கையைப் பிடிக்கிறான்) விநாயகர் சபித்து விட்டுப் போகிறார். விநாயகர் போனதும் கட்டியக்காரன் ஆடியன்ஸிடம் சொல்கிறான்: 'தண்ணீர்ப் பிரச்னைன்னதும் கடவுளே ஓடிப் போயிட்டாரு!'

தெருக்கூத்து ஒரு கலைக் கூத்து மட்டுமல்ல; தெருவிலுள்ள பிரச்னைகளையும் தொடுகிற இயக்கமாக மலரும் என்பதற்கான அடையாளங்கள் இருக்கின்றன.

**- ஜூனியர் விகடன்,**
**1984**